213—

ஆனைப்பள்ளத்திற்கு நகரப் பேருந்து

***399—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆனைப்பள்ளத்திற்குச் சென்று கொண்டிருந்த நகரப் பேருந்தை மீண்டும் விட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. இ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எடப்பாடி ஒன்றியத்தில் இருக்கும் ஆனைப்பள்ளம் கிராமத்திற்கு, நான் முன்பு சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, நகரப் பேருந்து விடப்பட்டிருந்தது. அந்தப் பகுதியை ஒட்டிய மோட்டூர், கோலையனூர், விடியாளப்பாளையம், சித்தூர், இராமகவுண்டனூர், அருவாப்பட்டி, வெட்டிலிதெரு ஆனைப்பள்ளம் ஆகிய குக்கிராமங்கள் அந்த நகரப் பேருந்தால் பயனடைந்து வந்தன. அந்த மக்கள் விளைபொருட்களை எடுத்துச் செல்வதற்கும், அங்கிருக்கக் கூடிய பள்ளி மாணவர்கள் எடப்பாடியில் இருக்கக் கூடிய மேல்நிலைப் பள்ளிக்கு வந்து செல்வதற்கும் அந்த நகரப் பேருந்துதான் மிக முக்கியமான பேருந்து. ஆகவே அதை உடனடியாக மீண்டும் விடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்போது விடப்பட்ட அந்தப் பேருந்து, சாலைகள் சரியில்லாத காரணத்தினால் நிறுத்தப்பட்டு இருக்கிறது. சாலைகளை செப்பனிடுவதற்காக கோட்டப் பொறியாளருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் விரைவிலேயே, ஒரு வார காலத்திற்குள்ளாகவே அதாவது அடுத்த மாதம் முதல் வாரத்திலிருந்தே

அந்தப் பேருந்து விடப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் இன்னும் ஒரு வாரத்திற்குள் பேருந்து விடுவதாகச் சொல்லியிருக்கிறார். அதற்காக போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அந்தப் பாதைகளை அந்தப் பகுதி மக்களே செப்பனிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். சித்தூரில் இருக்கக் கூடிய அனைத்து மக்களும் சேர்ந்து அந்தச் சாலையை செப்பனிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். இது குறித்து நான் போக்குவரத்துத் துறை அதிகாரிகளிடம் பலமுறை விண்ணப்பித்தும், இதுவரை அந்தப் பகுதியில் இருக்கின்ற ஏ.டி.சி.-ன் மேலாளர் எந்தவித சிறப்புக் கவனமும் எடுத்துக் கொள்ளாமல், கிராம மக்களுடைய உணர்வுகளை மதிக்காமல் நடந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அறிவுரை கூறி விரைவில் இதுபோன்ற கிராமங்களுக்கு நின்று போன பேருந்துகளை விட இந்த ஏழைகளின் அரசு முயற்சிகளை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே நிறுத்தப்பட்ட பேருந்துகளை எல்லாம் மீண்டும் விடுவதற்காக இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. நான் முன்பே குறிப்பிட்டதுபோல அடுத்த வாரமே அந்தப் பேருந்து விடப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே ரோடுகள் சரியில்லாமல் இருக்கின்றன. குறுகிய ரோடுகளாகவும் இருக்கின்றன. நகரப் பகுதிகளிலிருந்து கிராமங்களுக்கு வருகின்ற கூட்டமும் குறைவாக இருக்கிறது. எனவே அரசு கிராமங்களுக்கு மினி பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். மேலும், தனியார்கள், கிராமங்களுக்கு மினி வேன்கள் விட்டு அதிக அளவில் லாபம் சம்பாதிக்கிறார்கள். எனவே அரசாங்கத்தின் மூலமே மினி பஸ்களை கிராமப்புறங்களுக்கு விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசிடம் அதுபற்றிய செயற்குறிப்பு ஏதும் இல்லை.